<u>முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

OS.No.1337/2019 பெயர் : சுசீலா நாள் : 10.03.2026

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

எனது பிரமாண பத்திரிக்கையில் என் தந்தைக்கு 70% காது கேட்காது என குறிப்பிட்டுள்ளேன், அது சம்மந்தமாக ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன், ஆனால் குறியீடு செய்யவில்லை. வாதி 12.09.2019 வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். அந்த வழக்கறிஞர் அறிவிப்புக்கு, பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால், இல்லை. வா.சா.ஆ.2 ஆவணம் பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தத்தை எழுதி பதிவு செய்துக்கொடுத்த அன்றே, வா.சா.ஆ.1 அசல் பட்டாவை வாதியிடம் ஒப்படைத்து விட்டோம். பதிவாளர் அலுவலகத்தில், பதிவு செய்தபோது, ஒப்பந்த தொகை ரூ.2,50,000/- பெற்றுக்கொண்டேனா எனக்கேட்ட பிறகே ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றால், ரூ.2,25,000/- தான் கடனாக பெற்றோம். வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்தத்தில், ரூ.2,25,000/- தான் கடனுக்காக தான் மேற்படி ஆவணம் பதிவு செய்யப்படுகிறது என ஷரத்து கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால், இல்லை, கடனுக்காக தான் கையெழுத்து போட்டோம். அதனால்தான், வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பு பெற்றபிறகும், நான் எந்தவித பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால், சரியல்ல. வா.சா.ஆ.2 ஏற்பட்ட போது, நான், என் கணவர், என் மகன் ஆகியோர் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று, வாதி, பிரதிவாதி, நானும், என் மகனும் கையொப்பம் செய்தோம் என்றால், சரியல்ல. அதனால் தான் பிரதிவாதியை இந்த வழக்கில் சாட்சியாக முன்நிறுத்தவில்லை என்றால், சரியல்ல, அவருக்கு உடல்நிலை சரியில்லை என்பதால், சாட்சியம் அளிக்க வரவில்லை.

இந்த வழக்கு விபரம் எதுவும் எனக்கு தெரியாது என்றாலும், அதனால்தான், பிரதிவாதியும் என்ன எதிர்வாதம் செய்கிறார் என்ற விபரம் தெரியாது என ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரியல்ல, எனக்கு அனைத்து விபரங்களும் தெரியும். பிரமாண பத்திரிக்கையில் கடன் ரூ.2,25,000/- மட்டும் வாங்கியதாகவும், கிரைய ஒப்பந்தம் கடன் பொறுப்பிற்காக மட்டுமே ஏற்பட்டதாக கூறியுள்ளது பொய் என்று சொன்னால், சரியல்ல. வாதி கோரியவாறு, வாதி கேட்ட பரிகாரம் தாவா சொத்தை கிரையம் செய்துக்கொடுக்க வேண்டும் என்றால், கிரையம் செய்துக் கொடுக்க முடியாது, நாங்கள் இருப்பது அந்த ஒரு வீட்டில்தான். தாவா சொத்து வீடு மற்றும் காலியிடம் என்றால், சரிதான். வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்தப்படி வாதிக்கு பாக்கித் தொகை ரூ.50,000/- பெற்றுக்கொண்டு, கிரையத்தை பிரதிவாதி பூர்த்தி செய்ய கடமைப்பட்டவர் என்றால், சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால், சரியல்ல.

முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

OS.No.1337/2019 பெயர் : மணிவண்ணன் நாள் : 10.03.2026

பி.வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.2 : குறுக்கு விசாரணை :-**

நான் டிப்ளமோ படித்துள்ளேன். நான் புதூர்பெருமாபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான், எனது தாயார், தகப்பனார் ஆகியோர் கதவு எண்.12/12, புதூர்பெருமாபாளையத்தில் குடியிருந்து வருகிறோம் என்றால், சரிதான். பிரதிவாதி என் தாயாரின் தகப்பனார் ஆவார். என் தாத்தா சின்னசாமி கதவு எண்.13/12-ல் குடியிருந்து வருகிறார் என்றால், சரிதான், அது ஒரே வீடு ஆகும். என் தாத்தா தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கையில் கதவு எண்.13/12-ல் குடியிருந்து வருவதாக குறிப்பிட்டுள்ளார் என்றால், அது பழைய நெம்பர் ஆகும், கதவு எண்.12/12 புதிய நெம்பர் ஆகும். நான் மெக்கானிக் பிட்டராக வேலை பார்த்து வருகிறேன். எனக்கு எழுத படிக்க தெரியும். பிரதிவாதிக்கு எந்த வருடம் பட்டா கொடுத்தார்கள் என்றால், 14.10.1992-ம் வருடம் கொடுத்தார்கள். என்னிடம் காட்டப்படுவது பட்டா (வா.சா.ஆ.1) ஆகும். வழக்கு சொத்து 2789 சதுரடி ஆகும். அதில் வீடும், காலியிடமும் உள்ளது. அதன் சர்வே நெம்பர் 57/9 ஆகும். வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்தம் 25.07.2017-ம் வருடம் வாதியும், பிரதிவாதியும் பதிவாளர் அலுவலகத்தில் கிரைய ஒப்பந்தம் பதிவு செய்தார்கள் என்றால், கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யவில்லை, கையெழுத்து மட்டும் போட்டார்கள். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் சுவாதீனம் பெறப்படாத கிரைய ஒப்பந்த சாசனம் என குறிப்பிடப் பட்டுள்ளது, அந்த கிரைய ஒப்பந்தத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் நானும், எனது தாயாரும் கையொப்பம் செய்துள்ளோம் என்றால், சரிதான். அதேபோல் பதிவாளர் அலுவலகத்தில் நானும், எனது தாயாரும் சாட்சி கையொப்பம் செய்துள்ளோம் என்றால்,

சரிதான். பிரதிவாதி ஆரோக்கியமாக இருக்கிறாரா என்றால், வயோதிகம் காரணமாக காது கேட்காது. பிரதிவாதிக்கு காது கேட்காது என்பதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால், தாக்கல் செய்துள்ளோம். அது ஆவணமாக குறியீடு செய்யப்படவில்லை என்றால், சரிதான். இந்த வழக்கில் வாதி எதற்காக தாவா தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியும், தாத்தா சொத்தை கிரையம் செய்துக் கொடுக்கும்படி பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளார். வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பு வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய விபரம் தெரியுமா என்றால், தெரியும். அந்த அறிவிப்புக்கு பதில் அறிவிப்பு கொடுக்கப்படவில்லை என்றால், சரிதான். பிரதிவாதி சின்னசாமி என்ன எதிர்வாதம் இந்த வழக்கில் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியும். பிரமாண பத்திரிக்கையில் உள்ள விபரங்கள் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால், நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. பிரமாண பத்திரிக்கையில் 5 முதல் 7 வரை உள்ள சங்கதிகள் யார் சொன்னார்கள் என்றால், எல்லோரும் ஒரே வீட்டில் குடியிருந்து வருவதால், எனக்கு மேற்படி விபரங்கள் தெரியும். எனது தாயார் ரூ.2,25,000/- கடன் பெற்றதாகவும், நான் ரூ.2,00,000/- பெற்றதாகவும் முரண்பட்டு கூறியுள்ளீர்கள் என்றால், சரியல்ல. பிரமாண பத்திரிக்கையில் பத்தி 6-ல் ரூ.2,00,000/- பெற்றதாக கூறியுள்ளேன் என்றால், சரிதான். ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளவாறு முன்தொகை பெற்றுக்கொண்டதாக பதிவாளர் அலுவலகத்தில் கிரைய ஒப்பந்த ஆவணம் பதிவு செய்தோம் என்றால், சரியல்ல, கடனுக்காக தான் மேற்படி கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டது. உண்மையான கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டதால்தான், பதிலறிவிப்பு கொடுக்கவில்லை என்றால், அறிவிப்பு பெற்றவுடன் நாங்கள் வாதியின் வீட்டிற்கு சென்று பணத்தை கொடுத்து விடுவதாக கூறி ஒரு மாத கால அவகாசம் கேட்டோம், அவர் அதற்கு சம்மதித்ததால், நாங்கள் பதில்

அறிவிப்பு அனுப்பவில்லை. நாங்கள் வாதியை சென்று பார்க்கவில்லை என்றாலும், வழக்கிற்காக அவ்வாறு கூறுகிறேன் என்றாலும், சரியல்ல. வா.சா.ஆ.2-ன் படி வாதி கோரியவாறு என் தாத்தா சின்னசாமி அவருக்கு கிரையப் பத்திரம் ஏற்படுத்திக் கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால், சரியல்ல. நான் எனது தாத்தா சின்னசாமிக்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால், சரியல்ல.